ஈஷா மேடையில் சிக்ஸர் அடித்த சச்சின்!

எஸ்.ஷக்தி

கோவை

கிரிக்கெட் காதலர்களின் ஹீரோவான சச்சினும் ஈஷா மைய பக்தர்களின் ரட்சகரான ஜக்கிவாசுதேவும் ஒரே மேடையில் நடத்திய 'டபுள் மென் ஷோ' மாயாஜாலத்தில் இருந்து கோவை இன்னமும் மீண்டபாடில்லை!

கோவை ஈஷா யோகா மையத்தின் கிராம புத்துணர்வு இயக்கத்தின் சார்பாக ஒவ்வோர் ஆண்டும் நடத்தப்படும் 'கிராமோத்சவம்' விளையாட்டுப் போட்டிகள் ஏக பிரசித்தம். அதிலும் 12-வது ஆண்டு இறுதிப் போட்டியில் சிறப்பு விருந்தினர் சச்சின் டெண்டுல்கர் என்றால், சொல்லவா வேண்டும்.

செப்டம்பர் 4-ம் தேதியன்று மாலை கோவை கொடீசியா அரங்கில் நடைபெறும் இறுதி விழாவன்று பிற்பகலுக்கு முன்னதாகவே கோவை விமான நிலையத்தில் வந்திறங்கினார் சச்சின். அங்கிருந்து ஹெலிகாப்டர் மூலம் பூண்டியில் இருக்கும் ஈஷா யோகா மையத்துக்குச் சென்றார். அவரை அணைத்து வரவேற்ற ஜக்கிவாசுதேவ், ஆலயத்தை சுற்றிக் காட்டினார். லிங்க பைரவி ஆலயத்தில் நடந்த சிறப்பு அபிஷேகத்தை தரிசித்த சச்சின், அங்கிருந்து தியான லிங்கம் பகுதிக்குச் சென்று தியானம் செய்திருக்கிறார். அதன் பிறகு மூன்று பாதரச லிங்கங்களை வணங்கியவர், அடுத்து ஆதியோகி ஆலய சிவலிங்கத்தையும் பிரார்த்தித்திருக்கிறார்.

> 'மாலையில் மைதானத்தில் உங்களுக்காக ஒரு சர்ப்ரைஸ் வைத்திருக்கிறேன். யூ வில் லவ் இட்!'

ஈஷாவின் வெப்சைட்டுகளை அடிக்கடி பார்ப்பதாகவும் அதைவிட நேரில் ஆலயம் மிக பிரமாண்டமாக இருப்பதாகவும் ஆங்கிலத்தில் சொல்லி பூரித்த சச்சின், 'ஹேட்ஸ் ஆப் சத்குரு' என்று கூறியுள்ளார். அதற்கு 'இது ஈசன் செயல்' என்று சொல்லி சிரித்தார் ஜக்கி. அதை தொடர்ந்து சச்சினை, லஞ்சுக்கு அழைத்துச் சென்ற ஜக்கி, 'மாலையில் மைதானத்தில் உங்களுக்காக ஒரு சர்ப்ரைஸ் வைத்திருக்கிறேன். யூ வில் லவ் இட்!' என்றிருக்கிறார்.

மதிய உணவை முடித்துக் கொண்டு இறுதி போட்டி விழா நடைபெறும் கொடீசியா அரங்கிற்கு ஹெலிகாப்டரிலேயே இருவரும் பறந்தனர். கோவை மட்டுமன்றி நீலகிரி, ஈரோடு, சேலம் ஆகிய அண்டை மாவட்ட கல்லூரி மாணவ, மாணவிகளும் காலையில் இருந்தே திரண்டு வந்ததால் கொடீசியா மைதானம் நிரம்பி வழிந்தது.

மைதானத்திற்கு சச்சின் வந்தபோது, 'மட்டை பந்து தெய்வம் இதோ உங்கள் முன்னே!' என்று உற்சாகக் குரல் எழுப்ப, மைதானமே ஆரவார புயல். ஜக்கிவாசுதேவ் உடன் ராம்ப்பில் கூலாக நடந்து வந்த சச்சின், இறுதிப் போட்டிகளை காண்பதற்கான மேடையில் உட்கார்ந்தார். தான் ஒரு சர்வதேச செலிபிரெட்டி என்கிற பந்தா துளியும் சச்சினிடம் இல்லை. முகத்திலடிக்கும் புழுதி, கொட்டும் வியர்வைக்கு நடுவில் உதவியாளர்களை எதிர்பார்க்காமல் தானே பாட்டிலில் இருந்து தண்ணீரை ஊற்றி குடித்து செல்ப் சர்வீஸ் செய்து கொண்டார். ஏர்கூலர்களை அவரது அருகில் நகர்த்தியபோது, 'ரசிகர்கள் வெயில்லதானே இருக்காங்க. நானும் ரசிகன்தான்' என்று தள்ளிக்கொண்டு போக சொல்லி விட்டார்.



ஈஷா மையத்தில் சச்சின், சத்குரு...

பெண்களுக்கான வாலிபால் இறுதி போட்டியை ஜக்கிவாசுதேவ் சர்வீஸ் செய்து துவக்கி வைக்க, ஆண்களுக்கான வாலிபால் போட்டியை சச்சின் துவக்கி வைத்தார். கிரவுண்டில் இறங்கிய சச்சின், தனக்குப் பாதுகாப்பாக நெருங்கி நின்ற போலீஸை, 'பிளீஸ் கோ பேக், கோ பேக்!' என்று சொல்லிவிட்டு பந்தை சர்வீஸ் செய்ய, அதை அட்டெண்ட் செய்த வீரர் உற்சாகத்தில் குதித்தார். அவரது கைகளுக்கு சக வீரர்கள் கிஸ் கொடுக்க, கிரவுண்டில் ஆரவாரம் பிய்த்தது.

வெற்றிபெற்ற அணிகளுக்கு பரிசு வழங்கி முடித்த சச்சின் "விளையாட்டுதான் எனக்கு எல்லாம்! இங்கே விளையாடிய அணிகளின் வீரர்கள் ரெப்ரீயின் வார்த்தைகளை மதித்தார்கள். விளையாட்டில் ஒழுக்கத்திற்குத்தான் முதல் இடம் கொடுக்க வேண்டும். விளையாட்டு உங்களின் வாழ்க்கை ஸ்டைலையே மாற்றிவிடும். எனது வாழ்க்கை மாறிப்போனதைப் போல" என்றார்.

அடுத்து பேசிய ஜக்கிவாசுதேவ், "கிராமப்புற விளையாட்டை அங்கீகரிப்பதற்காக இங்கே வந்திருக்கும் சச்சினைப் பார்த்து நான் அதிசயிக்கிறேன். நீங்கள் எல்லோரும் சச்சினாகிவிட முடியாது. ஆனால் எல்லோரும் விளையாடலாம். விளையாட்டு உங்களை உயிரோட்டமாக வைத்திருக்கும். உயிர்வாழ ஒரு காரணமாக விளையாட்டு அமையட்டும்" என்றபோது சச்சின் எழுந்து நின்று கைதட்டினார்.

ஈஷா மையத்தில் சச்சினிடம், 'ஒரு சர்ப்ரைஸ் வைத்திருக்கிறேன்' என்று சத்குரு சொன்னாரில்லையா... அந்த சர்ப்ரைஸை கலைக்க வேண்டிய நொடியும் வந்தது. சட்டென்று ஒரு பேட்டை சச்சின் கைகளில் கொடுத்தார் ஜக்கி. பின் ஒரு பந்தை, தான் எடுத்துக் கொண்டார். சச்சின் சிரித்தபடியே பேட்டிங் பொசிஷனுக்குப் போக, ஜக்கியோ 'மாஸ்டர் பேட்ஸ்மேனை நான் கிளீன் போல்டு பண்ணிடுவேனா?' என்று கூட்டத்தைப் பார்த்து கேட்க, சச்சினுக்கோ செம வெட்கம்.

சத்குரு லாகவமாக பவுல் செய்ய, சச்சின் அதை தனக்கேயுரிய ஸ்டைலில் தூக்கியடித்து சிக்ஸராக்கியபோது, மைதானமே ஆடி அடங்கியது. சர்வதேச மைதானங்களில் சச்சினின் எத்தனையோ சிக்ஸர்கள் ஹிஸ்டாரிக்கல் ஹிட் ஆனவை. ஆனால், கோவையில் ஈஷா மேடையில் சச்சின் அடித்த லைவ் சிக்ஸர், ரசிகர்களின் கண்களில் அப்படியே பிரீஸ் ஆகி போனது யதார்த்தம்!